# Gospel Truth

# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 7 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 7


## ஒரு ஞானவானின் அழிவு

கர்த்தர் இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சொன்னார் (1 ராஜா 3 :5). சாலொமோன் ராஜா புகழ், செல்வம் மற்றும் நீடிய வாழ்வு ஆகிய இவைகளைக் கேட்காமல் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்(9).அவன் வேண்டிக் கொண்டபடியே கர்த்தர் செய்தார்.ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்.இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை(12).நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் சாலொமோனுக்கு அருளின ஞானத்தினால் அவனுடைய புகழ் எல்லா தேசங்களிலும் பரவிற்று.

சாலொமோன் ஐசுவரியத்தினாலும், மகிமையினாலும் பிரஸ்தாபமடைந்தார். அவர் தேவனுக்கென்று அழகிய, மகிமையான ஆலயத்தைக் கட்டினார்.இவ்வளவு ஞானத்தைப் பெற்றிருந்த போதிலும் கூட, கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அந்நிய ஜாதியாரான அநேக ஸ்தீரிகள் மேல் ஆசை வைத்து அந்நிய தேவர்களைப் பின்பற்றினான்.கர்த்தர் குறிப்பாக ஒரு கட்டளையை விதித்திருந்தார் : நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது. அவர்கள் நிச்சயமாய் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்.சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான் (1ராஜா 11: 2).



**சாலொமோனின் மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்**

சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள். அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.இப்படி ஒரு ஞானமுள்ள ராஜாவாகிய சாலொமோனின் அழிவு எவ்வளவு மோசமானது.

அந்நாட்களில், சாலொமோன் ராஜா சகல ராஜ்யங்களையும் ஆண்டுகொள்ளும் பொருட்டு தந்திரமுள்ளவனாய் அநேக மறுமனையாட்டிகளைக் கொண்டவனானான்.அவன் தேவனுடைய வார்த்தையை அலட்சியம் பண்ணி, தன் இருதயத்தை வற்புறுத்தி, தேவனிடத்திலிருந்து விலகிச் சென்றான்.ஆனாலும் தன் வழிகளின் நீதியிலே தவறவில்லை.

சாலொமோன் உடனடியாக தேவனிடத்திலிருந்து விலகவில்லை.ஒரு குறிப்பிட்ட காலங்கள் அளவு அவன் மறுமனையாட்டிகள் கொஞ்சம் கொஞ்சமாக அவன் இருதயத்தை தேவனை விட்டு வழுவச் செய்தார்கள்.ஒருவிசை சாலொமோனின் மனைவிகளில் ஒருத்தி அவரிடம் வந்து தன்னுடைய தேவர்களுக்குக் கோவிலைக் கட்ட வேண்டும் என்றாள்.அதற்கு சாலொமோன் பிரதியுத்தரமாக நான் அந்நிய தேவர்களை வணங்குவதில்லை.ஆனால் அதற்கான செலவுத்தொகைகளை வாங்கிக் கொள்ளும்படி கூறினான்.

பிறகு அவள் திரும்பி வந்து என் அன்பான சாலொமோன் ராஜாவே, என் பிரியமே! என்னுடைய தேவர்களுக்காக நீர் கட்டின கோவிலுக்கு நீர் வரவேண்டும் என்று பலமுறை அவனை தொந்தரவு


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | டிவி & சினிமா குறித்த வேதத்தின் நியமங்கள் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| | பக்கம் - 4 | | | |
| | ஈர்ப்பின் வல்லமை | | | |
| பக்கம் - 3 | பக்கம் - 5 & 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 & 9 | பக்கம் - 10 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15 ;

செய்து கொண்டேயிருந்ததினிமித்தம் சாலொமோனின் இருதயம் கொஞ்சம் கொஞ்சமாக உண்மையான தேவனை விட்டு விலகி, அந்நிய தேவர்கள் பக்கம் சாய்ந்தது.

சாலொமோனின் இருதயம் வழுவிப்போக, அவன் மனைவிகளின் மேலும், மறுமனையாட்டிகளின் மேலும் அவன் கொண்ட ஆசையே காரணமாய் அமைந்து விட்டது.இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது ஒரு ஞானமுள்ள மனிதனின் அழிவுக்குக் காரணமாய் இருந்த காரியங்களைத்தான்.நம்முடைய இருதயமும் எண்ணங்களும் வலுவிப்போகாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்க கடவோம்.நாம் பரிபூரணமாக தேவ ஆவிக்குள்ளாக்கப்பட வேண்டுமானால் தீய எண்ணங்களை விட்டு விலக வேண்டும்.பலவிதமான நமது எண்ணங்களில் அதிக ஈடுபாடு கொண்டு நம்மை தீயவைகளுக்கு அடிமையாக்கி விடுகிறது.

ஆவிக்குரிய வாழ்வில் சரிவு ஏற்பட்டு, தலையாய பரிசுத்தம் நம்மைவிட்டு எடுபட்டுப்போகும்.பல வருடங்களுக்கு பல நீர்துளிகள் துளிதுளியாய் ஒரு பாறை மீது விழும்போது,அப்பேற்பட்ட பாறையில் கூட சிறிய ஓட்டை உண்டாகிவிடும்.

நம் இரட்சிப்பைப் பறிக்க சாத்தானுக்கு எவ்வளவுகாலம் தேவைப்படுகிறது என்பதை விட உலகம் முழுவதுமுள்ள மிக நுட்பமான பாவங்களால் நம்மை விழப்பண்ணி இரட்சிப்பைப் பறித்துக்கொள்ளுகிறான். ஆவிக்குரிய பாதுகாப்பை நாம் இழந்து பாவங்களை அனுமதிக்கிறோம். நாம் என்ன செய்கின்றோம் எங்கெல்லாம் செல்கின்றோம் எவற்றைப் பார்க்கின்றோம் கவனிக்கிறோம் யாரோடு ஐக்கியமாயிருக்கிறோம் இவையெல்லாம் நம் வாழ்வின் செயல்பாடுகளை தீர்மானிக்கிற காரியங்கள்.சாலோமோன் தன் முதிர்வயதிலேதான் அழிந்துபோனார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.உங்களை சுற்றியிருக்கிற எல்லா தாக்கங்களையும் பொருட்படுத்தாமல் கவனமாக ஜெபத்துடன் அநேகவிதமான பாவ உணர்வுகளை எதிர்கொள்ள விழிப்புடன் செயல்படுங்கள்.

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.


**ஆசிரியர்: டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், தேவ சபை**
**2/227 - கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது, நாம் அவபக்தியையும்,லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ண வேண்டும்
– தீத்து 2 :11-12

பாவம், எல்லா பக்கத்திலுமிருந்து சுற்றி நம்மை நெருக்கி நிற்கிறதினால், கிறிஸ்து இயேசுவினுடைய கிருபையானது பிசாசினுடைய இந்த உலகத்தில், நாம் கிறிஸ்துவுக்குள் வாழ உதவி செய்கிறது.லௌகீக இச்சைகளினாலும் அவபக்தியாய் நடந்து கொள்ளாமல் நீதியாய் நடக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.இந்த மாதத்திலே கர்த்தர் என் இருதயத்திலே ஏவின ஒரு காரியம் **இச்சைகளின் தாக்கங்கள்**.காலங்கள் செல்ல செல்ல உலகத்தின்பால் நம்முடைய ஈர்ப்பு அதிகமாகிக்கொண்டே போகிறது.முந்தைய பரிசுத்தவான்களும் நம்மைவிட மேலான உலகின் எல்லா சோதனைகளினின்றும் தங்களைக் காத்துக் கொண்டுதான் வாழ்ந்திருக்கிறார்கள்.நாம் ஞானமாகவும்,விழிப்புடனும் செயல்பட்டு நம்மைச் சுற்றி நிற்கிற எல்லா சோதனைகளையும் ஜெயிப்போம்.

பெயர்க்கிறிஸ்தவர்களாய் நடிக்கிற, பரிசுத்தமாய் வேஷமிட்டு திரிகிற அநேக கிறிஸ்தவர்களின் பாரம்பரியமான பழக்கவழக்கங்களைக் கண்டு என் இருதயம் கலங்குகிறது. தன் பிள்ளைகளின் சறுக்குதலுக்கு பெற்றோர்களே காரணமாக அமைந்துவிடுகிறார்கள்.

அநேக ஜனங்கள் இன்று தங்களுடைய அபிஷேகத்தையும்,தேவனுடைய வல்லமையையும் இழந்து கொண்டிருக்கிறார்கள்.பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.அப்போதுதான் பாவம் சூழ்ந்த இந்த உலகில் கர்த்தருக்குள் நிலைத்திருக்க முடியும்.

இந்த உலகிலுள்ள நுட்பமான தாக்குதல்களால் பலரது வாழ்வில் ஏற்படும் மாற்றங்களைக் காண நேரம் ஆகிறது.அவர்கள் தங்கள் பரிசுத்த வாழ்வையே இழந்துபோகும் நிலை நேரிடுகிறது.

இந்த உலகத்தின்பால் நம் ஆசைகளை வைக்கும்போது கர்த்தருக்கும் நமக்குமான உறவில் விரிசல் உண்டாகிறது.அப்படியே இவ்வுலகம் பாவத்தினால் பெருகிக்கொண்டே போகும்போது தேவனுக்கும் நமக்கும் பிரிவினை உண்டாகிறது.உலகத்தைக்கொண்டு நம்மைநாம் நிதானிக்க கூடாது.மாறாக பரிசுத்த வேதாகமத்திலுள்ள தேவனுடைய வார்த்தைகளைக் காத்து நடப்பதைக் கொண்டுதான் தீர்மானிக்க முடியும்.

சர்ச்சைக்குரிய சில காரியங்களான **இண்டர்நெட், சினிமா, தொலைக்காட்சி,இசை** இன்னும் பல விஷயங்களைக் குறித்து இந்த இதழில் விவரித்துள்ளோம். கர்வத்திற்காகவோ,தற்காப்பிற்காகவோ அல்ல.இவைகளின் தாக்கங்களைக் குறித்து, நிதானமாக ஆராய்ந்து உணரலாம்.நம் இதயக்கதவை தேவஆவியானவருக்காக திறப்போம்

என் அன்பான வாசகநண்பர்களே உங்கள் செயல்களெல்லாம் தேவனுக்கு முன்பாக பிழையற்றதும் பரிசுத்தமுமாயிருக்கிறதா? உங்களை நீங்களே சோதித்து, உணர்ந்துகொண்டதுண்டா? உலகமானது நாம் பாவத்தை சகித்துக்கொண்டு, புரிந்துகொண்டு வாழத்தான் நம்மை பழக்குவிக்கிறது.உலகத்தின் தீய எண்ணங்களை விட்டு விலகி, சத்திய வழியில் உண்மையாக தேவனோடு வாழ பழகுங்கள்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*



# வார்த்தையின் தாக்கம்

நம்பத்தகாத நட்பு

சினிமா

தொலைக்காட்சி

பொழுதுபோக்கு

இசை

விளையாட்டு

ஊடகம்

பாவமுள்ள சமூகம்

அசுத்தம்

லௌகீக இச்சை

பரிசுத்தமின்மை

மந்திரவாதம்

சாராயம்

போதை வஸ்துக்கள்

---

"இதுபோல இருந்து நீங்கள் இந்த உலகத்தின்பால் ஈர்க்கப்பட வேண்டாம்"

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : ஈர்ப்பின் வல்லமை

**வேத வாசிப்பு :**
புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப் பண்ணும்.கலா 5 : 9

**விளக்கம்**

எதிரியானவன் மிக நுட்பமான தந்திர உபாயங்களை கையாண்டு பரிசுத்தத்தை விட்டு விலக செய்கிறான்.எங்கே எப்படி சாத்தான் கிரியை செய்வான் என விழிப்போடு நாம் செயல்பட்டு அவனுடைய தந்திரங்களை முறியடித்து தேவனோடு பரிசுத்தமாய் வாழ பழகிக் கொள்ள வேண்டும்

**வரையறை**

ஈர்ப்பு/தாக்கம் - தொட்டு உணரமுடியாத வகையிலோ அல்லது மறைமுகமாகவோ ஒருவரது குணாதிசயங்களையும், பழக்க வழக்கங்களையும் மாற்றக்கூடிய வல்லமையும்,அதிகாரமும் கொண்டது

**I.அனைவரும் ஈர்ப்பின் தன்மைக்கு உட்பட்டவர்களே**

A.அப்போ 14 :14-15 நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே

B.சங்கீதம் 103 : 14 நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்

C.மத் 26 : 41 மாம்சமோ பெலவீனமுள்ளது

D.நீதி 6 : 27-28 தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக் கூடுமோ?

E.மத் 6 :22-24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது.

**II.வேதாகம சான்று**

A.ஆதி 3:1-8 **ஆதாம் & ஏவாள்**

B.நியா 16 :18-20 **சிம்சோன்**

C.1 ராஜா 11 :4 **சாலொமோன்**

D.லூக் 22 : 55-62 **பேதுரு**

**III.விழிப்போடு செயல்படுங்கள்**

A.கலா 6 :7-8 மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்

B.ஏசாயா 5 : 20-22 தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி

**IV.சிறிய செயல்களின் வல்லமை**

A.1 கொரி 5 : 6 கொஞ்சம் புளித்தமா

B.உன்னத 2:15 சிறுநரிகள்

C.பிரசங்கி 10 : 1 செத்த ஈக்கள்

**V.எதிர்மறை எண்ணங்களும்,தாக்கங்களும்**

A. கலா 5 : 19-21 மாம்சத்தின் கிரியைகள்

B.1கொரி 15 : 33 ஆகாத சம்பாஷணைகள்

C.2கொரி 6 : 14-17 அவிசுவாசிகள்

D.நீதி 7 :7-26 லௌகீக இச்சை

E.எபேசி 5 :18 திராட்சரசம்

**VI.பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்**

A.நீதி 4 :14-15 துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே

B.2தீமோ 2 :22 பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு

C.எபேசி 5 : 6-13 அந்தகார கிரியைகளை கடிந்துகொள்

D.சங் 141 :4 என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்

E.எபேசி 4 :27 பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்

F.யாக்கோபு 4 : 7-8 பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

**VII.இருதயத்தையும்,மனதையும் பரிசுத்தமாய் காக்கக்கடவோம்**

A.நீதி 4 :23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்

B.மத் 5 : 29-30 உன் வலதுகண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப்பிடுங்கி எறிந்துபோடு

C.சங் 101 : 3 தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்கமாட்டேன்

D.எபி 12 :13-15 பரிசுத்தமுள்ளவர் களாயிருங்கள்

E.1கொரி 6 :12 எல்லாம் தகுதியாயிராது.

**VIII.நேர்மறை எண்ணங்கள்**

A.எபி 10 :24-25 சபைகூடிவருதல்

B.1யோவான் 1 :5-7 ஐக்கியம்

C.நீதி 27 :17 இரும்பை இரும்பு கருக்கிடும்

D.சங் 119 : 11 உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்

E.சங் 1 :1-2 அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

**முடிவு**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்
- ரோமர் 12 : 2

# ஈர்ப்பின் வல்லமை

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**பிசாசின் ஆவிகளுடைய கிரியை**

சாத்தான் தேவபிள்ளைகளுக்கு விரோதமாகப் போராடி யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறான். நம்முடைய ஒவ்வொரு ஆவிக்குரிய கிரியைகளை அழிப்பதே அவனது நோக்கமாகும். எதிரியானவன் நயவஞ்சகமாய் நம்முடைய பெலவீனங்களை அறிந்து வைத்திருக்கிறான். தேவபிள்ளைகள் சாத்தானால் பாவம் செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். இதினிமித்தம் அவர்கள் மிகுந்த ஆபத்தை எதிர்நோக்கி சிரமப்பட வேண்டியுள்ளது.

**எல்லோரும் ஈர்ப்புக்கு உட்படும் பெலவீனர்களே**

ஒருவருடைய குணாதிசயங்களையும், நல்லொழுக்கங்களையும் மாற்றக்கூடிய வல்லமை உடையது. மனிதன் மாம்சீகப் பிரகாரமாக இருப்பதினால் ஒருவித தூண்டுதலினால் பாவத்துக் குள்ளாக்கப்படுகிறான். பவுலும் பர்னபாவும் கூறும் போது நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே (அப்போ 14 :15) என்கிறார்கள். ஆகவேதான் இயேசுகிறிஸ்து தம் சீஷர்களிடம் நீங்கள் சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பெலவீனமுள்ளது என்றார் (மத் 26 : 41).



பல கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தின் கிரியைகளான பொழுதுபோக்கிற்கு அடிமைப்பட்டு பாவத்தால் தங்களைக் கறைப்படுத்திக் கொள்கிறார்கள்.

**மனிதராகிய நாம் இந்த மாம்ச தேகத்திலிருக்கும் வரை ஈர்ப்புக்குட்பட்டவர்களாகவே இருக்கிறோம்**

அவர்கள் தேவனோடு நாம் ஏன் ஐக்கியமாயிருக்க முடியவில்லை என ஆச்சரியப்படுகிறார்கள். தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக் கூடுமா (நீதி 6 : 27).

**வேதாகம உதாரணங்கள்/சாட்சிகள்**

சாத்தானின் சதிக்கு உட்பட்டு விழுந்துபோன அநேகரைக் குறித்து வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டு, ஆதாமும் ஏவாளும் தங்கள் பரிசுத்தத்தையும், தேவனோடு இருந்த நல்ல உறவையும் இழந்து போனார்கள் (ஆதி 3 : 1-8). சிம்சோன் நயமான பெண்ணாகிய தெலீலாளுடன் சிநேகமாயிருந்து தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி, தன் பலன் இதினிமித்தமே இருக்கிறது என்றான் (நியாதி 16 : 18-20). சாத்தானால் மெதுவாக தூண்டப்பட்டு, பாவத்திற்குள்ளாக்கப்பட்டு விடுகிறார்கள்.

சாலொமோன் வயது சென்றபோது அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள் (1ராஜா 11 :4). அநேகருடைய கேள்விகளினிமித்தமாக சீஷன் பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்தான் (லூக் 22 :55-62). அநேகர் பரிசுத்தவாழ்வை விட்டுவிலகுவதற்கு காரணம், உலகத்தின் ஆசை இச்சைகளால் ஈர்க்கப்பட்டு, தேவனிடத்தில் உறுதியாய் தரித்து நிற்பதில்லை.

**சிறிய செயல்களின் வல்லமை**

சிறிய காரியங்களுக்கு மிகப்பெரும் வல்லமையுண்டு. கொஞ்சம் புளித்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? (1கொரி 5 : 6). திராட்சதோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள் (உன்னதப்பாட்டு 2 :15). ஒரு பெரிய பாவச்செய்கையானது எப்போதும் ஒரு கிறிஸ்தவனுடைய இரட்சிப்பின் அனுபவத்தை இழக்கச் செய்யாது.

மாறாக சிறிய அற்பமான பாவமே நம் சிந்தனைகளையும், செயலையும் தாக்கி நம் உண்மையையும் பரிசுத்தத்தையும் அழித்துப்போடும் ஆனால் அது பாவமில்லை என எண்ணி அதையே செய்ய தொடர்வார்கள்.

அதாவது நான் அங்கே செல்லலாம் அந்த இசையை கேட்கலாம் இந்த சினிமாவைப் பார்க்கலாம். ஏனெனில் நான் மீட்கப்பட்டு விட்டேன். எந்த தவறும் இல்லை என்பர். இதுமாதிரியான வார்த்தைகள் ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்வில் மிகப்பெரிய சரிவை உண்டாக்கும். இதை சிந்தித்துப் பாருங்கள். அவை எவ்வாறு நம்மை பாதிக்கின்றன? தவறான காரியங்களை செய்ய தூண்டப்படுகிறார்களா?

பரிசுத்தமில்லாத காரியத்துக்கு உங்கள் மனதை சாயப்பண்ணுகிறீர்களா? அற்பமான சிறு சிறு விஷயங்களைக் குறித்து மிகவும் ஞானமாயிருந்து விளங்கிக் கொள்ளுங்கள்.

**சுற்றி நெருங்கி நிற்கிற தூண்டுதல்கள்** மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன :விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள் முதலானவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலா 5 :19-21).

அவைஇசை, பொழுது போக்கு, விளையாட்டு இன்னும் பல. தேவ பிள்ளையாயிருக்கிற யாரும் தீமையான காரியங்கள் தன்னை தொட அனுமதிப்பதில்லை. அசுத்த ஆவியின் தூண்டுதலேயன்றி வேறெதினாலும் ஒரு தேவபிள்ளை தவறுதலுக்கு உட்படுவதில்லை. வேதம் சொல்லுகிறது ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1கொரி 15 :33).



பரிசுத்தமில்லா மனிதர்களோடு நம்முடைய நட்பு இருக்குமேயானால் நாளடைவில் ஆவிக்குரிய பெலம் இழந்துபோய் பரிசுத்தத்திலும், விசுவாச வாழ்க்கையிலும் நாம் கறைபட்டவர்களாகி விடுவோம். அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது (2கொரி 6 : 14 ). ஆகவே ஒருவர் தன் நண்பர்களையும், வாழ்க்கை துணையையும் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

**தேவபிள்ளையே...**
**சாத்தானுக்கு இடங்கொடாமல்**
**அநீதிக்கு எதிராக**
**உறுதியாக தரித்திருங்கள்**

**தேவபக்தியை நிராகரி**

துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோருடைய வழியில் நடவாதே. அதை வெறுத்துவிடு. அதின் வழியாய்ப் போகாதே அதை விட்டு விலகிக் கடந்து போ (நீதி 4 :14-15). கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள் (எபேசி 5 :11). பரிசுத்தமில்லாததை சரியென்று நியாயம் சொல்வதே இன்று பலருடைய வேலை. மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். பிசாசுக்கு இடங்கொடாமலிருங்கள் (எபேசி 4 : 27). அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு (2தீமோ 2 :22). எவ்வளவு பெரிய ஊழியராக இருந்தாலும், அவரது ஊழியம் மிகப் புகழ்வாய்ந்ததாக இருந்தாலும் வேதத்திற்கு ஒத்து வராத எதையும் தூக்கி எறியுங்கள்.

**சிந்தையையும் இருதயத்தையும் காத்துக்கொள்தல்**

அநீதியை நடப்பிக்கிற எந்த காரியத்துக்காயினும் தீங்கானவைகளுக்காயினும் விலகி உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளக்கடவீர்கள்.

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் (நீதி 4 :23). தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்க மாட்டேன் (சங் 101.3) என்று சொன்ன தாவீதைப்போல உங்கள் வாழ்வைப் பரிசுத்தமாய் காத்துக்கொள்ளுங்கள். மற்ற கிறிஸ்தவர்கள் ஒரு தவறை செய்தால், நீங்கள் அதைச் செய்யாமல் கடந்து போங்கள். உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதை பிடுங்கி எறிந்துபோடு (மத் 5 :29-30).

பரிசுத்த பவுல் கூறுகிறார் எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன் (1கொரி 6 : 12).


**நல்ல விளைவு**

முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் பாதங்களுக்கு வழியை செவ்வைப்படுத்துங்கள் (எபி 12 :13-15). நல்லொழுக்கங்களைப் போதித்து, செம்மையானவைகளைச் செய்து நேர்மையான வழியிலே நடவுங்கள். சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல, நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திச்சொல்லக்கடவோம் (எபி 10 : 24-25 ). நற்கிரியைகளினால் உங்கள் வாழ்வை கட்டும்போது ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் (சங் 119 : 11).

**தீர்மானம் உங்களுடையது**

நம்மைச் சுற்றி ஏராளமான காரியங்கள் நெருக்கி நிற்கிறது. ஆயினும் ஒரு தேவபிள்ளை தன் வாழ்வில் எதை அனுமதிக்க வேண்டும் என தீர்மானித்து வாழ வேண்டும். நன்மையானதும், நீதியும், பரிசுத்தமுமானதை தெரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12 :2). ஆவிக்குரிய பயபக்தியற்ற ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என ராகதேவன்! லூசிப்பரின் பின் செல்லாதீர்கள்.



# டிவி & சினிமா குறித்த வேதத்தின் நியமங்கள்




சினிமா பார்ப்பதையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்பதையும் குறித்து ஒரே வார்த்தையில் வேதம் கூறுவது: பரிசுத்தம் பரிசுத்தமாய் இருப்பது என்பது, தூய்மை, மாசற்றது, பிரித்தெடுக்கப்பட்டது, ஒரே இயல்பானது.

வேதம் சொல்லுவது என்னவெனில் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 கொரி 6 : 20). தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். (1தெச 4 :7). பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே ( எபி 12 : 14). கண்களின் இச்சையான சினிமாவும், தொலைக்காட்சி நிகழ்வுகளும் நம்மை எவ்வளவாய் சீர்கெட்டுப் போகப் பண்ணுகிறது என்று சிந்தித்துப் பாருங்கள் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (1 கொரி 10 : 31) பாவம் என்பது வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் வாயிலாக பெறப்பட்ட திரைகளிலோ அல்லது கேபிள் வயர்களிலோ இல்லை. மாறாக அதன் வழியாக ஒளிபரப்பப்படுகிற நிகழ்சிகளிலேயே பாவம் நம்மை ஆண்டுகொள்கிறது. இன்று இவையாவும் அநீதியையும், அசுத்தத்தையுமே காட்டுகிறது .

கலா 5 : 19 – 21 சொல்லப்பட்டுள்ளது– மாம்சத்தின் கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள், இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை. சினிமா என்பது மேற்சொல்லப்பட்ட அனைத்து விதமான மாம்ச இச்சைகளையும் சித்தரிக்கக் கூடியது.

ஏன் ஒரு தேவபிள்ளை பரிசுத்தமாய் காக்கப்பட வேண்டிய தன் இருதயத்தையும், சிந்தையையும் அசுத்தத்திற்கு ஒப்புவிக்க வேண்டும்? மாம்சத்தின் இச்சைகள் நம்மை சுற்றி இந்த உலகில் ஏராளமாய் இருக்கின்றன. அதை விரும்பி வீட்டிற்குள்ளே கொண்டு வர வேண்டும் என்பதே இல்லை. தானாகவே நம்மை சுற்றி அநேக மாம்ச இச்சைகள் கிரியை செய்து கொண்டிருக்கின்றன. சினிமா மூலமாகவும், தொலைக்காட்சி நிகழ்வுகளின் வழியாகவும் மாம்சமானது வஞ்சிக்கப்பட்டு, இச்சையினாலும் லௌகீக கிரியையினாலும் வருகிற பாவத்தை நாம் சிலுவையில் அறைய வேண்டும். கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலி 4: 8). இருதய சிந்தனையை இந்த தேவ வார்த்தை தெளிவாக்குகிறது ஒருவர் சினிமா பார்ப்பதினால் பாவம் செய்து விட்டார் எனலாமா? இல்லை ஆனால் அந்த சினிமாவிலே பரிசுத்தமில்லாத, கேடான காரியங்கள் நிறைந்திருக்கிறது என அறிந்திருந்தும் பார்ப்பதால் பாவமாகிறது. ஆகவே இதை தவிர்ப்பது நல்லது, வரும் சமுதாயத்தினருக்கு கெடுதலை கொண்டு வரும் பல காரியங்களை எதிரியான சாத்தான் இதற்குள் தான் வைத்திருக்கிறான். டிவியில் ஒளிபரப்படுகின்ற நிகழ்ச்சி நிரலிலே இருக்கிற எல்லா நிகழ்ச்சிகளின் தன்மைகளையும் எந்தவொரு டிவி நெட்வொர்க்கும் முழுமையாக பகுத்தறிந்து வெளியிடுவதில்லை. பல ஆய்வுகளின் புள்ளிவிவரப்படி, இதன் எதிர்மறையான தாக்கங்களால் பாதிக்கப்படுவது குழந்தைகள்தான். நிறைய சினிமாக்களிலும், தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் அசுத்தமான காரியங்களே காணப்படுகின்றன. இது குழந்தைகளைப் பாதிக்கிறது.



**பரிசுத்தமாய் வாழ விரும்புகிற ஒரு தேவபிள்ளை ஏன் தன் இருதயத்தையும் சிந்தையையும் அசுத்தத்தால் நிரப்ப வேண்டும்?**

இதன் விளைவாக வலிய தீங்கு செய்தல், தவறான முறையில் பொருளை பயன்படுத்துதல், உடல் பருமன் , பாலியல் செயல்பாடுகள் முதலிய கேடுகள் நேரிடுகிறது. ஒரு குழந்தை டிவியில் நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருக்கும் போது, பார்த்ததை பின்பற்ற முயலுகிறது.

பல படங்கள் தவறான எண்ணங்களையும் கருத்துகளையும் முன்வைத்து சித்தரிக்கப்படுவதின் பலனாக பாவ சுபாவம் நமக்குள்ளே வெளிப்படுகிறது. தவறான எண்ணங்களை புகுத்தி, பாவத்தை ஒரு வேடிக்கை காட்சியாக காண்பிக்கப்படுகிறது. முக்கியமாக குழந்தைகளும், இளைஞர்களும் தாங்கள் பார்ப்பதையும், கவனிப்பதையும் கொண்டு இழுக்கப்படுகிறார்கள் எனக்கு நினைவிருக்கிறது, ஒரு ஆலய கன்வென்ஷன் கூட்டத்தில் ஒரு பயபக்தியுள்ள சிறுவனை சந்தித்தேன், அங்கே நான் விமானத்தில் சென்றிருந்தேன். நான் ஒரு போதும் அப்படி செய்ய மாட்டேன் என அந்த சிறுவன் என்னிடம் கூறினான். ஏனெனில் திகில் படம் ஒன்றில் பாம்புகள் நிறைந்த விமானத்தைப் பார்த்து அவன் ஏற்கனவே பயந்திருக்கிறான். மேலும் அவன் தொடர் வண்டியில் செல்லாததற்கும் ஒரு காரணத்தைச் சொல்லுகிறான். எப்படி ஒரு படத்தின் தாக்கம் இருக்கிறது என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

சிலர் நான் நல்ல படங்களை மட்டுமே பார்ப்பேன் என சொல்வதுண்டு. உண்மையாக இருக்கலாம் ஆனால் நேர்மையாக சொல்லமுடியுமா? அவை முழுவதும் மாசற்றது என்று? அது நேரத்தை வீணாக்கவில்லையா?

ஆவிக்குரிய உங்கள் உணர்வை பாதிக்க வில்லையா? ஒருவர் படத்தை பார்க்க ஆரம்பித்து விட்டால், அதன் ஆர்வத்தால் தூண்டப்பட்டு மேலும் மேலும் அதிகமாகவே பார்க்க ஆரம்பித்து விடுவார். அதுவே அவரை அடிமையாக்கி, கண்ட காட்சிகளை செய்ய தூண்டுகிறது.நல்ல நிகழ்ச்சி என பாரட்டப்படுவதற்காக வணிகரீதியாக ஒளிபரப்பப்படுகிற சில நிகழ்சிகள் மனஉளைச்சலையும், தடுமாற்றத்தையுமே தருகிறது. தொடர்ந்து இதன் தாக்கங்களுக்கு நாம் உட்படும்போது தேவனுடைய கரத்தை விட்டு முற்றிலுமாக விலகி அசுத்தத்தை பின்பற்றுகிறவர்களாகி விடுகிறோம். இது ஆவிக்குரிய நமது வாழ்வின் பரிசுத்தத்தையும், சத்தியத்தை வலிவற்றதாக்குகிறது. அநேக கிறிஸ்தவர்களுக்கு இதுவே கண்ணி/பொறி ஆகவே விழித்துக் கொள்ளுங்கள்.



**ஒருவர் சினிமா பார்க்கும்படி தூண்டப்பட்டால் இன்னும் அதிகம் அதிகமாக தான் ஈர்க்கப்பட்டு விடுகிறார்கள்**

தேவன் விரும்புகிற துதியின் நேரத்தையும், ஆராதனையின் நேரத்தையும், இன்று சினிமாக்கள் ஆக்கிரமித்துக் கொள்கிறேன் சினிமாவையும், தொலைக்காட்சி நிகழ்சிகளை பார்ப்பதும் நமது எண்ணங்களை சிதறடித்து, சோர்வை உண்டாக்குகிறது. வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் தயங்குகிறோம் மேலும் மாணவனாய் இருக்கிறவர்களின் கவனம் வகுப்பறையில் இல்லாமலும், ஆலயத்தின் ஆராதனை நேரங்களில் இல்லாமலும் சிதறடிக்கப்படுகிறது.சினிமாவும் தொலைக்காட்சியும் தீய எண்ணங்களையே இந்த உலகில் பரப்ப உபயோகப்படுகிறது. சில முக்கிய தருணங்களில் இதை நான் உணர்ந்திருக்கிறேன். பொழுதுபோக்கு துறை சார்பாக மேற்கொள்ளப்படும். பாவம் நிறைந்த மேற்கத்தியமயமாதல் என்கிற கொள்ளை மிகவும் மோசமானது. பல நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர்களும் இதன் தாக்கத்தை அறிந்துள்ளார்கள். அகந்தையான பல காரியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அதனை வழிபாட்டு பொருளாக உருவகப்படுத்தி, அபாயகரமான விளைவுகளையும் ஆபாசங்களையும் வேடிக்கையாக்கி காட்டுகிறார்கள். அவர் நம்மை பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறார்.

ஆகவே நமது நேரத்தை வீணாக்கும் தடைக்கற்களை உடைத்தெறிந்து முன்னேறிச் செல்வோம்.மறுபடியுமாக சொல்லுகிறேன் தொலைக்காட்சியும், சினிமாவையும் குறித்த வேதத்தின் நியமம் என்ன? தேவனுக்கு முன்பாகவும் அவருடைய வார்த்தைக்கு அழைத்திருக்கிறார். ஆகவே நமது நேரத்தை வீணாக்கும் தடைக்கற்களை உடைத்தெறிந்து முன்னேறிச் செல்வோம்.

மறுபடியுமாக சொல்லுகிறேன் தொலைக்காட்சியும், சினிமாவையும் குறித்த வேதத்தின் நியமம் என்ன? தேவனுக்கு முன்பாகவும் அவருடைய வார்த்தைக்கு முன்பாகவும் பரிசுத்தமாக உங்களை நிறுத்தி நிதானித்துக் கொள்ளுங்கள். பரிசுத்தம் என்பதே அந்த சுலோகம். பரிசுத்தம் என்பது வீடியோ, டி.வி. இன்டர்நெட், படச்சுருள் இது போன்ற காரியங்களில் கண்டிப்பாக இல்லை.ஆகவே இவற்றின் தாக்கங்கள் நம்மில் கிரியை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

தேவனுடைய பிள்ளைகள் மற்றவர்களுக்கு முன்மாதிரிகளும், ஒளியின் பிள்ளைகளுமாய் இந்த உலகில் வாழ்பவர்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேவ ஊழியர்களும் தேவதாசர்களும் ஒரு உண்மையான, நிலையான பரிசுத்தத்திலும் , தேவனுக்கேற்ற நீதியிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

தாவீது ராஜா சங்கீத புஸ்தகத்திலே இவ்வாறு கூறுகிறார் ( சங் 101 : 3) தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன். வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன் அது என்னைப் பற்றாது.

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** ஒரு கிறிஸ்தவரின் வாழ்வில் இணையதள பயன்பாடு என்பது என்ன பங்கு வகிக்கிறது?

**பதில் :** பல கேள்விகள் கேட்கப்படுவதுண்டு . ஒரு பரிசுத்த மனிதன் இணையதளத்தை பயன்படுத்தலாமா? கூடாதா? கிறிஸ்தவர்களின் வாழ்வில் இதன் பங்கு என்ன ? இணையதளத்திற்கும் (இண்டர்நெட்) தொலைக்காட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

தொலைக்காட்சிக்கும், இண்ட்நெட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்வது அவசியம். தொலைக்காட்சியின் முதன்மையான பயன்பாடு பொழுதுபோக்கு, ஆகவே அது சினிமாகவோ (அ) விளையாட்டு நிகழ்வுகளாகவோ இருக்கலாம்.

செய்தி என்பதும் அதில் உள்ள நிகழ்வுதான். ஆனால் இதை மாத்திரம் நாம் முழுமையாக பயன்படுத்தப் போவதில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். மறுபுறம் இன்டர்நெட் என்பது உலகலாவிய இணையதளங்களை உள்ளடக்கிய ஒரு நெட்வொர்க் அமைப்பாகும்.



இன்டர்நெட் என்பது வேலைக்காகவும், தொலைதொடர்புக்காகவும், ஆராய்ச்சிகளுக்காகவும் பயன்படுகிறது. இது ஒரு நல்ல கருவியாக இருந்த போதிலும் கூட அதனோடு சேர்ந்து தீமைகளும் அதிகமாக இருக்கிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் அநேக நிகழ்ச்சிகளையும் இன்று இன்டர்நெட் உதவியுடன் பார்க்க முடிகிறது. ஆகவே தொலைக்காட்சியைக் காட்டிலும் மிக அதிகமான ஆபத்தினைக் கொண்டதே இந்த இன்டர்நெட் ஆகும்.

ஆனாலும் இரண்டுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு கட்டுப்பாடு என்பது தொலைக்காட்சியை விட இன்டர்நெட்டில் நம்மிடம் அதிகம் உள்ளது. மொத்தத்தில் தீங்கு நிறைந்ததே இன்டர்நெட். மக்கள் தங்கள் மாம்ச இச்சைகளை அனுபவித்துக் கொள்ள எங்குமே ரகசியமாக செல்ல வேண்டியதில்லை. தன்னுடைய வீட்டிலேயே ரகசியமாக இன்டர்நெட்டை உபயோகிக்கிறார்கள். ஆகவே இன்டர்நெட் சக்திவாய்ந்தது, ஆபத்தானது.

பரிசுத்தம் என்கிற ஒரு கோட்பாடு இன்டர்நெட்டில் கண்டிப்பாக ஒரு கருவியாக புகுத்தப்பட வேண்டும். அதன் பிறகு இன்டர்நெட் பொழுதுபோக்காக மாறும்போது உண்மையான பரிசுத்தம் வெளிப்படும். வேலை செய்யும் நபர்களின் மன அழுத்தத்தையும், அசாதாரண சூழ்நிலையை போக்கும் ஒரு பொழுது போக்காகவும் மக்கள் கருதுகிறார்கள். தூங்குகிற நேரத்தை குறைத்து பல மணி நேரம் இன்டர்நெட்டில் செலவிடுகிறார்கள். சிலர் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களை விட்டு தங்களுக்கென்று ஆன்லைனில் அவர்கள் உருவாக்கிய ஒரு பகுதியில் செலவிடுகிறார்கள் இதனால் போராபத்து நேரிடும்.

இன்டர்நெட் என்பது குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கி போன்றது. இது விளையாடுவதற்கல்ல மாறாக கவனமாக கையாளப்பட வேண்டியது சில ஜனங்கள் துப்பாக்கியை வைத்திருப்பதோ அல்லது பயன்படுத்துவதோ இல்லை இதைப்போலதான் இன்டர்நெட்டும் சிலர் தங்கள் பலவீனமான, ஆபத்தான

இந்த இன்டர்நெட்டை விட்டு முற்றிலுமாக வெளிவர வேண்டிய சூழலில் உள்ளனர். இன்டர்நெட்டை சரியாக பயன்படுத்துவதால் ஏராளமான பயன்கள் உள்ளன. ஆனால் பல நேரங்களில் அது நம் நேரத்தை வீணாக்கி விரயமாக்கி விடுகிறது. அதைக்குறித்த முழுமையான ஒரு அறிவு

விழிப்புணர்வு நம்மில் பலருக்கு இல்லை. சமூக வலைதளங்கள் நண்பர்களோடு தொடர்பு கொள்ள உதவுகிறது இவையும் தவறாக உபயோகப்பத்தப்படும்போது ஆபத்தாகிவிடுகிறது. தவறான அணுகுமுறைகளால் பல குடும்பங்களில் பிரிவினை உண்டாகிறது. மேலும் இளம் தலைமுறையினருக்கும் முதியோர்களுக்கும் இடையே உள்ள பாகுபாட்டை நீக்குகிறது.

எப்படி குண்டுகள் நிரப்பப்பட்ட ஒரு துப்பாக்கி பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுமோ, அதேபோலத்தான் இன்டர்நெட்டும் பத்திரமாக கையாளப்படவேண்டும். பள்ளிக்கூடப் பாடங்களுக்காக குழந்தைகள் இன்டர்நெட்டை உபயோகப்படுத்தும் போது நாம் அவர்களைக் கண்காணித்து முழுமையான ஒரு அறிவு விழிப்புணர்வு நம்மில் பலருக்கு இல்லை. சமூக வலைதளங்கள் நண்பர்களோடு தொடர்பு கொள்ள உதவுகிறது . இவையும் தவறாக உபயோகப் படுத்தப்படும்போது ஆபத்தாகி விடுகிறது. தவறான அணுகுமுறைகளால் பல குடும்பங்களில் பிரிவினை உண்டாகிறது. மேலும் இளம் தலைமுறையினருக்கும் முதியோர்களுக்கும் இடையே உள்ள பாகுபாட்டை நீக்குகிறது.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION



உங்களுக்குத் தெரியுமா?

## மக்கள் மீது இசையின் தாக்கம்

பலவிதமான நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய வலிமை இசைக்கு உண்டு.**மகிழ்ச்சி,கோபம்,துக்கம்** என எல்லா உணர்வுகளையும் தூண்டுவது அது.விதவிதமான இசை, வார்த்தை ஜாலங்களும், தாளங்களும் மனிதர்களை இந்த உலகத்தின் பால் ஈர்க்க தூண்டுகிறது.சிலர் மன ஆறுதலுக்காகவும்,தோழமைக்காகவும் இசையை நாடுகிறார்கள். தற்காலிகமான ஒரு மன நிம்மதிக்காகத்தான் பெரும்பாலும் பலர் இசையை நாடுகிறார்கள்.

**உங்கள் வாழ்வில் இசையின் பங்கு என்ன?** அது பரிசுத்தமும், மாசற்றதும் நன்மையானதுமாக உள்ளதா? கர்த்தர் நிரப்ப விரும்புகிற ஒரு வெற்றிடத்தை அது ஆக்கிரமித்துக் கொள்ளுகிறதா?






## யுத்தம் உங்களுடையதல்ல

**நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்.இந்த யுத்தம் உங்களுடையதல்ல,தேவனுடையது 2 நாளாகமம் 20:15**

**யோசபாத்** யுத்தத்தின் செய்தியைக் கேள்விப்பட்டபோது இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை.நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான் (12).

எதிரியானவன் தேவபிள்ளைகளை சீர்குலைக்கும் எண்ணத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறான்.சத்தியத்துக்கு விரோதமாகவும்,தேவஆவியின் வரம் பெற்ற ஊழியர்களின் சுவிசேஷத்தை சிதறடிக்கப் பண்ணவும் சாத்தான் போராடிக் கொண்டிருக்கிறான்.



யோசபாத்தைப் போல தேவனை நோக்கி நம் கண்களை ஏறெடுக்கும் போது அவர் நமக்குப் புகலிடம் தருவார்.நம்மைக் காத்துக்கொள்வார்.

யோசபாத்திற்கு தேவஆவியானவர் கொடுத்த அந்த பலம் இன்றும் நமக்கு தேவன் தந்திருக்கிறார்.பயப்படாதீர்கள்.யுத்தம் உங்களுடையதல்ல.அது தேவனுடையது என்று கர்த்தர் மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறார்.பெரிய ஜனக்கூட்டத்தை நமது சொந்த மாம்ச பெலத்தால் மேற்கொள்ளவே முடியாது.மாறாக தேவனுடைய கரங்கள் நம்மை வழிநடத்தி முன்செல்லும்போதே நம்மால் ஜெயிக்க முடியும்.

மதம் மாற்றுவதாக என்மேல் கோர்ட்டில் ஏழு ஆண்டுகள் நடந்து வந்த பொய் வழக்கிலிருந்தும்,எதிராளிகளிடமிருந்தும் கர்த்தர் அற்புதமாக, ஆச்சரியமாக விடுதலை தந்தார்.அல்லேலூயா!

நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் (17) என்று யோசபாத் ஜனங்களிடத்திலே சொன்னது போல நாமும் தேவன் மேலுள்ள நம்பிக்கையில் அவரை அண்டிக்கொள்ளும்போது அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்.ஜெபமே ஜெயம்!

**தொடர்புக்கு:-**
ஆசிரியர்,
காஸ்பல் ட்ரூத்
தேவசபை
2/227 - கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316